**செய்தி வெளியீடு எண்: 748** **நாள்: 12.12.12.**

## <u>சிறுபான்மையினர் மாணவ/மாணவியர்களுக்கான தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்வி உதவித்தொகை (புதுப்பித்தல்) விண்ணப்பிப்பதற்கான</u>

## இறுதி நாள் <u>31.12.2012</u>

தொழில்கல்வி/தொழில்நுட்பக்கல்வி பயிலும் சிறுபான்மை மாணவ/மாணவியர்கள் தகுதிமற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை (Merit Cum Means Based Scholarship) <u>புதுப்பித்தல்</u> ஆன்லைன் (**www.momascholarship.gov.in**) மூலம் **31.12.2012** வரை விண்ணப்பிக்கலாம்.

மாணவர்கள் முந்தைய ஆண்டு தேர்வில் தேர்ச்சி பெற்று குறைந்த பட்சம் 50 விழுக்காடு மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல்வேண்டும். இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை (புதியது) பெற்றிருப்பின் புதுப்பித்தல் கல்வி உதவித்தொகை பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

ஆன்லைன்மூலம் விண்ணப்பிக்கும் புதுப்பித்தல் விண்ணப்பங்களை மாணவ/மாணவியர்கள் கல்வி நிறுவனங்களுக்கு தவறாமல் அனுப்புதல் வேண்டும். விண்ணப்ப படிவத்தையும் உடன் படியிறக்கம்செய்து, கையொப்பமிட்டு அத்துடன் முந்தைய ஆண்டு (2011-12 ) தேர்வு மதிப்பெண் சான்றிதழ்கள், வருமான சான்று ( காலம் 1.4.2011 முதல் 31.3.2012வரை) வங்கி கணக்கு எண் (CBS Account No & IFS Code) விவரங்களுடன் கல்லூரி முதல்வர் / டீன்–க்கு அனுப்புதல் வேண்டும்.

கல்வி நிறுவனங்கள் மேற்படி விண்ணப்பங்களை பரிசீலித்து, ஆன்லைன் மூலமாகவும், அதன் விண்ணப்பப் படிவங்கள் (மற்றும்) மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன் முதல்வரின்/டீன் கையொப்பத்துடன் சிறுபான்மையினர் நல ஆணையர், 807,(5–வது தளம்), அண்ணாசாலை, சென்னை –600 002 என்ற முகவரிக்கு 10.1.2013 க்குள் தவறாது அனுப்புதல் வேண்டும். மாணவர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் முதல்வர்/டீன் ஆகியோர்களின் கையொப்பமிடாத விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

மாணவ/மாணவியர்கள் தங்களின் புதுப்பித்தல் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு சிறுபான்மையினர் நல ஆணையருக்கு கல்லூரியிலிருந்து 10.1.2013 க்குள் அனுப்பப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும்.

மேலும் உதவிக்கு சிறுபான்மையினர் நல ஆணையர் அலுவலக தொலைபேசிக்கு (Help Line) 044-28523544 தொடர்புகொள்ளலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**